செய்தி வெளியீடு எண்: 669 நாள்:16.09.2020

## செய்திவெளியீடு

**"நகர்ப்புற நிலப் பரப்புகளைப் பசுமைப்படுத்துதல்"** குறித்த கருத்தாய்வுக் கூட்டம் காணொளி வாயிலான பங்கேற்பு முறையுடன் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்களின் தலைமையில் 16.09.2020 அன்று காலை 11.00 மணிக்கு மனித மேம்பாட்டு காணொளி அரங்கம், எழிலகம், சென்னை– 5ல் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு உறுப்பினர்–செயலர் திரு. அனில் மேஷ்ராம், இஆப., முனைவர். பு.செ. அர்ச்சனை கல்யாணி, இ.வ.ப., குழுமத் தலைவர் (நிலப் பயன்பாடு) மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, துறைசார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்கள் கலந்து கொண்டனர்.

**கருத்தாய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட தலைப்புகள்:**

1) நகர்ப்புற நிலப்பரப்புகளை மேம்படுத்துதல் – திரு. சிவா. ஆர், 2) செங்குத்துத் தோட்டங்கள் மற்றும் நகர்ப்புற வெப்பத் தீவுகளைக் குறைத்தல் – முனைவர். ஆர். வித்யா, 3) செங்குத்து வேளாண்மை – முனைவர். ஆர். ஸ்வர்ணப்பிரியா, 4) பாலைவனமாக்குதலைத் தடுத்தல் மற்றும் பசுமை வளங்களை அதிகரித்தல் – முனைவர், கீதா லட்சுமி 5) கார்பன் மடுவை மேம்படுத்துதல் மற்றும் மாசுபாட்டைக் குறைத்தல் –

முனைவர். குரியன் ஜோசப் ஆகியோர்கள் இக்கருத்தரங்கில் மேற்காணும் தலைப்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

**கருத்தாய்வின் நோக்கங்கள்:**

நகர்ப்புற நிலப்பரப்புகளைப் பசுமையாக்குவது உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை வலுப்படுத்த உதவுகிறது. அவற்றின் பயன்கள் சில 1) நமது நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க உதவுகிறது, 2) இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது, 3) உடல் வீக்கத்தைக் குறைக்கிறது, நகர்ப்புற பசுமை இடங்களானது காற்று மாசுபாட்டைக் குறைப்பதிலும், காலநிலை மாற்றத்தைத் தணிப்பதிலும், பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை வழங்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், புயல் நீர் மேலாண்மை, காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்களுக்கான வாழ்விடங்களை வழங்குதல், கார்பன் வரிசைப்படுத்துதல் மூலம் காற்றின் தரத்தை மேம்படுத்துதல், நுண்ணுயிர் காலநிலையை உருவாக்குதல், நகர்ப்புற வெப்ப தீவுகளின் விளைவுகளைக் குறைத்தல் மற்றும் போக்குவரத்தினால் ஏற்படும் ஒலி மாசினைக் குறைத்தல் போன்ற சுற்றுச்சூழல் நன்மைகளை வழங்க பசுமை இடங்கள் உதவுகிறது.

உறுப்பினர் செயலர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**